**பாரம்பரிய கற்றலுக்கு அப்பால்: வேளாண் சூழலியல் முறைமைகளின் நெகிழ்திறன் மீதான இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் இயல்திறனை விருத்தி செய்வதற்கான சர்வதேச முனைவு**

வேறுபட்ட சமூக-பொருளாதார மற்றும் சூழலியல் நிலைமைகள் காரணமாக, வேளாண் சூழலியல் முறைமைகள் உலகமெங்கிலும் அபிவிருத்தி செயன்முறையில் மட்டுமின்றி குறிப்பாக வெப்பமண்டலங்களிலும் விமர்சன ரீதியான வகிபங்கினை வகிக்கின்றன. திட்டமிடப்பட்ட மற்றும் திட்டமிடப்படாத பன்மைத்துவமென வெப்பமண்டல விவசாய முறைமைகள் வகைப்படுத்தப்படுகின்றன. இவ் இரு வகைகளும் விவசாய சூழலியல் முறைமையின் உற்பத்தி, நிலைத்திருப்புத் தன்மை, பூச்சிக்கொள்ளி கட்டுப்பாடு, மண் செயன்முறை மற்றும் விவசாயம் மற்றும் இயற்கை வாழ்விடங்களுக்கிடையில் உள்ள நிலப்பரப்புக்களுக்கிடையிலான இயற்கை விவசாய உயிர்வாழ் ஜீவிகள் மீது குறிப்பிடத்தக்களவான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கைத்தொழில்மயமாக்கம், நகரமயமாக்கம், சனத்தொகை அதிகரிப்பு, சந்தை பொருளாதாரம், மற்றும் காலநிலை மாற்றம் போன்றவை வெப்பமண்டல விவசாய-சூழலியல் முறைமைக்கு அச்சுறுத்துலாக அமைகின்ற பிரதான காரணிகளாகும். வெப்பமண்டல நாடு எனும் வகையில், இலங்கை அதன் பொருளாதாரத்தின் முக்கியமான துறையாக விளங்கும் விவசாயத்தின் மீது தங்கியுள்ளதுடன், விவசாய உற்பத்திகளுக்கு தடையாக அனர்த்தங்கள் அமைகின்றமையினால், குறிப்பிடத்தக்களவான மூலதன இழப்புக்களும் அதன் விளைவாக நிகழ்கின்றன. இலங்கையின் அரிசியை - மையமாகக் கொண்ட வேளாண் - சூழலியல் முறைமையானது வெள்ளங்கள் மற்றும் வறட்சிகள் போன்ற இயற்கை அனர்த்தங்களின் தாக்கத்திற்கு உட்பட்டது. இத்தகைய இயற்கை அனர்த்தங்கள் ஒவ்வொரு ஆண்டும் இலங்கையை தாக்குகின்றன. இத்தகைய பின்புலத்தில், இலங்கையின் வெப்பமண்டல வேளாண் சூழலியல் முறைமையினை வேளாண் சூழலியல் முறைமைகளுடன் தொடர்புடைய புதிய சமூக மற்றும் பொருளாதார சவால்களுக்கு முகம்கொடுக்கும் வகையில் உயர்கல்வியுடன் தொடர்புறுத்த வேண்டும்.

இவ் பின்புலத்தில், ‘வேளாண் சூழலியல் முறைமைகளின் நெகிழ்திறனை கட்டியெழுப்புதல்’ (Building Resilience in Tropical Agro-Eco Systems – BRITAE) என்ற திட்டமானது தெரிவு செய்யப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களில் ஆய்வு மற்றும் புத்தாக்க இயல் திறனை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதுடன், இலங்கையில் வேளாண் சூழலியல் முறைமைகளின் நெகிழ்திறனை கட்டியெழுப்புவதற்குள்ள சவால்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த முனைகின்றது. வெப்பமண்டலங்களில் வேளாண்-சூழலியல் நெகிழ்திறனது நிலை தொடர்பில் குறிப்பிடத்தக்களவான அறிவு இடைவெளியொன்று காணப்படுவதோடு, குறிப்பாக, இலங்கையில் அறிவு, ஆய்வு மற்றும் புத்தாக்கம் என்ற பரப்புக்களில் குறைபாடொன்று காணப்படுகின்றதெனலாம். BRITAE இலங்கையிலுள்ள ஐந்து இணை நிறுவனங்களான, ருகுன பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம், மொறட்டுவை பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும்

சப்பிரகமுவ பல்கலைக்கழகம் என்பவற்றோடு கூட்டிணைந்து செயற்படுகின்றது. திட்டத்தின் ஐரோப்பிய இணை பங்காளிகளாக, பெரிய பிரித்தானியாவிலுள்ள ஹடர்ஸ்பில்ட் பல்கலைக்கழகம் மற்றும் சென்டல் லன்ஸ்சயர் பல்கலைக்கழகம், எஸ்டோனியாவின் டலினியன் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் லிதுனியாவின் விலினியஸ் கெடிமினஸ் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் போன்றன காணப்படுகின்றன. இலங்கையிலுள்ள ஐந்து பல்கலைக்கழகங்கள் மற்றும் நான்கு ஐரோப்பிய ஒன்றிய பல்கலைக்கழகங்கள் திட்ட முன்மொழிவை அபிவிருத்தி செய்ததுடன், அவ் குழுவிற்கு "Eramus+: உயர் கல்வி – ஐரோப்பிய ஒன்றியத்தின் கல்வி, ஒளி - ஒலி மற்றும் கலாசார நிர்வாக முகவராலயத்தின் சர்வதேச இயல்திறன் அபிவிருத்தி" எனும் அதியுயர்ந்ததும், போட்டிமிகுந்ததும், மதிப்பிற்குரியதுமான மானியத்திட்டத்தினை பெற்றுக் கொள்ள முடிந்தது. இவ் திட்டமானது 2020 லிருந்து 2023 வரையான மூன்றாண்டு காலப்பகுதியைக் கொண்டதாகும்.

BRITAE திட்டத்தின் ஊடாக இலங்கையில் முதுகலைமாணிப்பட்ட திட்டத்திற்கான இணை பாடவிதான மாதிரிகள் (modules) அபிவிருத்தி செய்யப்படுவதோடு, அதன் தரத்தை உயர்த்துவதற்கும், இயல்திறனை அதிகரிப்பதற்கும் மற்றும் உலக சந்தையினது தேவைகளுக்கு பொருத்தமான கல்வித் திட்டங்களை அறிமுகம் செய்வதும் மேற்கொள்ளப்படவுள்ளன. BRITAE யினது பாடவிதானமானது, உணவுப் பாதுகாப்பு, வேளாண்-சூழலியல் உல்லாசப் பயணத்துறை, வேளாண் சட்டங்கள் மற்றும் கொள்கைகள், காலநிலை மாற்றம் போன்ற பல்வேறு விடயப் பரப்புக்களைக் கொண்டதாக காணப்படுகின்றது. இவ் பாடவிதானமானது அனர்த்தங்களுக்கான வேளாண்-சூழலியல் நெகிழ்திறனோடு தொடர்புடைய சவால்களுக்கு உயர் கல்வி நிறுவனங்கள் கவனம் செலுத்துவதற்கான திறனை அபிவிருத்தி செய்கின்றது. மேலும், அது வடக்கு மற்றும் தெற்கினது கல்வியியல் வலைப்பின்னலின் ஊடான அறிவு பரிமாற்றத்தினால் சர்வதேச ஒத்துழைப்பொன்றினையும் வழங்குகின்றது. இவ் திட்டம் இலங்கையிலுள்ள உயர் கல்வி நிறுவனங்கள், மாணவர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள், பிராந்திய மற்றும் தேசிய அதிகாரிகள், விவசாயிகள், அரசாங்க ஊழியர்கள், அரச-சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அத்தகைய பல்வேறு தரப்பினர்களை பயன்பெறுநர்களாக அடையாளம் கண்டுள்ளது.

BRITAE யானது ஐரோப்பிய ஒன்றிய பல்கலைக்கழகங்களில் பங்குபற்றுவதின் ஊடாக இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுக்குள் ஐரோப்பிய கல்வியினது நடைமுறைகளை இணைத்து கற்றலுக்கான பாரம்பரிய முறையிலிருந்து அப்பாற் சென்றதொரு வழிமுறைகளை கையாள்கின்றது. முதுகலைமாணி திட்டத்தினது பெரும்பான்மையான உள்ளீடுகள் பல்துறை கற்கைநெறியாகவும் குறுக்குவெட்டு இயல்திறன் அபிவிருத்தி வாய்ப்புக்களை வழங்குவதாகவும் அமையப் பெற்றுள்ளது. BRITAE யானது ஆய்வு அபிவிருத்தியை மேம்படுத்துவதோடு, பல்வேறுபட்ட கற்கைநெறிகளையுடைய ஆய்வு குழுக்கள் மற்றும் தேசிய மற்றும் பிராந்திய (ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஆசியா) பின்புலங்களுக்கிடையிலான செயற்திறனுடைய இடைத்தொடர்பாடலினூடாக அனர்த்தங்களுக்கான வேளாண் சூழலியல் நெகிழ்திறனை அதிகரிப்பதற்கான புத்தாக்கச் செயற்பாடுகளையும்

மேற்கொள்வதோடு, அவை கொள்கை மற்றும் நடைமுறையில் குறுக்குவெட்டு அனுபவத்தையும் பொருள்பொதிந்த தன்மையையும் கொண்டமைந்ததாகும்.

அத்தோடு, கற்றல், கற்பித்தல், ஆய்வு மற்றும் அபிவிருத்தி போன்றவற்றிற்காக "Smart Agro-ecosystem Resilience" (SAR) மையமொன்று உருவாக்கப்படுவதினூடாக, BRITAE கற்பவர் மையப்படுத்திய நிகழ்நிலை கற்பித்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ் SAR மையமானது தகவமைப்பு காணொளி பயிற்சி, பாரிய தரவு சேகரிப்பு, உயிரியல் பரீட்சை முறைமைகளுக்கு தகவமைப்புச் செய்தல் மற்றும் இலங்கை மாணவர்களுக்கு திறந்த மூலாதாரங்களை பெற்றுக் கொடுத்தல் போன்றவற்றை வழங்கும். பாரியமட்ட திறந்த நிகழ்நிலை கற்கைகளை வழங்குவதே இவ் மையத்தினை உருவாக்குவதற்கான அடிப்படையான இலக்காகும். 21ஆம் நூற்றாண்டின் கற்கை மாதிரிகளாக இவ் கற்கைகளே அடையாளப்படுத்தப்படுவதோடு, அது நிகழ்நிலை தளத்தினூடாக கற்றல் தொடர்பான உள்ளடக்கங்களை வழங்குகின்றது.

அத்தோடு, பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய தொழிற்துறை தளமொன்று உருவாக்கப்படவுள்ளது. அது மாணவர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் உள்வாங்குகை திட்டங்கள் என்பவற்றை கவனம் செலுத்துவதோடு, சமூக - உளவியல் திறன்களின் அபிவிருத்தி, தொழில் வழிகாட்டி, தொழில் வாய்ப்புக்கள், ஆய்வினதும், புத்தாக்கத்தினது வணிகமயப்படுத்தல் போன்றவை தொடர்பில் கவனம் செலுத்தும். 2023 ஆம் ஆண்டில் "வேளாண் - சுற்றுச்சூழலின் முறைமைகளின் நெகிழ்திறனை கட்டியெழுப்புதல் தொடர்பான சர்வதேச கருத்தரங்கிற்கான" ஒழுங்கமைப்பு திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. ஆய்வாளர்கள் வேளாண்-சூழலியல் முறைமைகள் மற்றும் அனர்த்த நெகிழ்திறன் தொடர்பான தலைப்புக்களை ஆய்வுக்குட்படுத்தி தமது கண்டுபிடிப்புக்களை நிகழ்வில் சமர்பிக்கவும் முடியும்.

இறுதியாக, BRITAE திட்டம் வேறுபட்ட தலைப்புக்கள், குறிப்பாக உயர் கல்வியை அணுகுதல், காலநிலை தொடர்பான எதிர்கால அழிவுகளுக்கு தயார்படுத்திக் கொள்ளுதல் உட்பட தேசிய மற்றும் நிறுவன தந்திரோபாயங்களுக்கு பங்களிப்பு செய்கின்றது. மேலும் இவ் திட்டமானது, உள்ளூர் மற்றும் சர்வதேச மாணவர்கள், பயிற்றுனர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கல்வியலாளர்கள் போன்றோரின் அறிவை பெற்றுக் கொள்ளவும், உலகெங்குமுள்ளவர்களிடத்திலிருந்து ஆய்வை மையமாகக் கொண்ட கற்கைகள் மற்றும் கண்டடைவுகளுடன் தொடர்புறவுமான இயல்திறனை வழங்குகின்றது.

BRITAE Project - www.britae.lk